# ஐக்கிய அரபு அமீரக அதிபருடன் பிரதமர் சந்திப்பு

டிசம்பர் 01, 2023

ஐக்கிய அரபு அமீரகத்தில் 1 டிசம்பர் 2023 அன்று நடைபெற்ற சிஓபி-28 உச்சிமாநாட்டின் இடையே, ஐக்கிய அரபு அமீரகத்தின் தலைவர் ஷேக் முகமது பின் சயீத் அல் நஹ்யானை பிரதமர் திரு நரேந்திர மோடி சந்தித்தார்.

சிஓபி-28 உச்சிமாநாட்டை வெற்றிகரமாக நடத்தியதற்காக பிரதமர் ஷேக் முகமது பின் சயீத்துக்கு வாழ்த்து தெரிவித்தார். சிஓபி-28 இல் பசுமை காலநிலை திட்டத்தில் (GCP) உயர்மட்ட நிகழ்வை இணைந்து நடத்தியதற்காக அதிபர் முகமது பின் சயீத் அல் நஹ்யானுக்கு அவர் நன்றி தெரிவித்தார்.

இரு தலைவர்களும் தங்களின் பரந்த மற்றும் துடிப்பான இருதரப்பு உறவுகளை மதிப்பாய்வு செய்தனர். இஸ்ரேல்-ஹமாஸ் மோதல் குறித்தும் அவர்கள் கருத்துகளை பரிமாறிக் கொண்டனர்.

அடுத்த மாதம் இந்தியாவில் நடைபெறவுள்ள வைப்ரண்ட் குஜராத் உச்சி மாநாட்டிற்கு அதிபர் முகமது பின் சயீத் அல் நஹ்யானை பிரதமர் அழைத்தார்.

**துபாய்**
**டிசம்பர் 01, 2023**